டிசம்பர் – 09

TNPSC துளிகள்

- சௌராஷ்டிரா அணியானது ரஞ்சி ஒரு நாள் கோப்பைப் போட்டி என்றும் அழைக்கப் படும் ஹசாரே கிரிக்கெட் கோப்பைப் போட்டியின் இறுதிப் போட்டியில் மகாராஷ்டிரா அணியினை 5 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தி விஜய் ஹசாரே கோப்பையை வென்றது.
- விக்ரம் சம்பத் என்பவர் எழுதிய 'Brave Hearts of Bharat, Vignettes from Indian History' என்ற தலைப்பிலான ஆண்கள் மற்றும் பெண்கள், மற்றும் அவர்களின் கட்டுக்கடங்காத சுதந்திரம் மற்றும் தைரிய உணர்வு ஆகியவற்றினை விளக்கும் 15 கதைகள் அடங்கியத் தொகுப்புப் புத்தகமானது டெல்லியில் வெளியிடப்பட்டது.
- எகிப்தின் கெய்ரோ நகரில் நடைபெற்ற சர்வதேச துப்பாக்கி சுடுதல் விளையாட்டு கூட்டமைப்பின் பிரெசிடென்ஸ் கோப்பையை இந்தியத் துப்பாக்கி சுடுதல் வீரர் ருத்ராங்க்ஷ் பாட்டீல் வென்றார்.

தேசியச் செய்திகள்

இந்தியக் கடற்படைக்கான குடியரசுத் தலைவரின் நிலையான நிறம் மற்றும் முத்திரை

- இந்தியக் கடற்படைக்கான குடியரசுத் தலைவரின் நிலையான நிறம் மற்றும் முத்திரை ஆகியவற்றிற்கான புதிய வடிவமைப்பை அறிமுகப்படுத்துவதற்கு இந்தியக் குடியரசுத் தலைவர் ஒப்புதல் அளித்துள்ளார்.
- இது இந்தியாவின் மகத்தான கடல்சார் பாரம்பரியத்தை எடுத்துக் காட்டுவதோடு, சக்தி வாய்ந்த, திறம் மிக்க, நம்பிக்கை மற்றும் பெருமைமிக்க இந்தியக் கடற்படையை அடையாளப்படுத்துகிறது.
- இந்தியக் கடற்படைக்கான குடியரசுத் தலைவரின் நிலையான நிறம் மற்றும் முத்திரையின் முந்தைய வடிவமைப்பு 2017 ஆம் ஆண்டு செப்டம்பர் 06 ஆம் தேதியன்று உருவாக்கப் பட்டது.
- இந்தியக் கடற்படை முத்திரையானது, மாறுபட்ட வடிவமைப்புடைய நங்கூரத்திற்கு பதிலாக தெளிவான நங்கூரத்துடன் கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

- 1951 ஆம் ஆண்டு மே 27 ஆம் தேதியன்று அப்போதையக் குடியரசுத் தலைவர் டாக்டர் ராஜேந்திர பிரசாத் அவர்களால் இந்தியாவின் மூன்று படைகளில் ஒன்றான கடற் படைக்கு President's Colour வழங்கப்பட்டது.

சர்வதேசச் செய்திகள்

சர்வதேச வரி ஒத்துழைப்புக் கட்டமைப்பு

- ஐக்கிய நாடுகள் சபையின் அரசுகளுக்கிடையேயான செயல்முறையின் அடிப்படையில் ஒரு சர்வதேச வரி ஒத்துழைப்புக் கட்டமைப்பை அல்லது செயற் கருவியை உருவாக்குவதற்கான தீர்மானத்தினை ஐக்கிய நாடுகள் பொது சபை ஒரு மனதாக ஏற்றுக்கொண்டது.
- 54 ஆப்பிரிக்க நாடுகளின் கூட்டமைப்பின் சார்பில் நைஜீரியா இந்தத் தீர்மானத்தைச் சமர்ப்பித்தது.
- உலகெங்கிலும் மேற்கொள்ளப்பட்டு வரும் வரி விதிப்பு முறைகளை ஒழுங்குபடுத்தும் பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டு அமைப்பின் 60 ஆண்டுகாலப் பணிக்கு இது முற்றுப்புள்ளி வைக்க உள்ளது.
- இதே போன்ற ஒரு கட்டமைப்பைப் பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டு அமைப்பு முன்மொழிந்துள்ளது.
- இந்தக் கட்டமைப்பு ஆனது ஆப்பிரிக்கா மற்றும் ஆசியப் பகுதிகளில் உள்ள வளர்ந்து வரும் நாடுகளுக்குப் பயனளிக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.
- பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டு அமைப்பினால் அறிமுகப் படுத்தப் பட்ட "இரு பிரிவு தீர்வு", ஆனது எண்ணிமப் பொருளாதாரத்தில் நிலவும் வரி சார்ந்த சவால்களை எதிர்கொள்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

பொருளாதாரச் செய்திகள்

இந்தியாவின் முதல் செயல் சாரா வரிச் சேமிப்பு நிதி

- IIFL பரஸ்பர நிதி நிறுவனமானது, இந்தியாவின் முதல் செயல் சாரா வரிச் சேமிப்பு நிதியை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இது ஒரு தடையற்ற செயல் சாரா சம பங்கு சார்ந்த சேமிப்புத் திட்ட (ELSS) நிதியாகும்.

- இத்திட்டம் நிஃப்டி 50 அளவினை ஒத்தது போன்று செயல்பட முயல்வதோடு, அந்தக் குறியீட்டின் மாறுபாட்டிற்கு ஏற்ப வருமானத்தை உருவாக்கும்.

IIFL Mutual Fund

புதிய நிஃப்டி பாரத் பத்திரக் குறியீடு

- தேசியப் பங்குச் சந்தை நிறுவனத்தின் துணை நிறுவனமான NSE குறியீடுகள் நிஃப்டி பாரத் பத்திரக் குறியீடுகள் தொடரின் கீழ் மேலும் ஒரு குறியீட்டை அறிமுகப் படுத்தி உள்ளது.
- நிஃப்டி பாரத் பத்திரக் குறியீடுகளைக் கண்காணிக்கும் முதல் பாரத் பத்திரக் குறியீடுகள் ETFs 2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் தொடங்கப் பட்டன.
- 2033 ஆம் ஆண்டில் நிறைவடையும் புதிய பாரத் பத்திரக் குறியீட்டின் அறிமுகமானது, நிலையான வருமானம் சார்ந்த முதலீட்டாளர்களுக்கு அதிக முதலீட்டுத் தேர்வுகளை வழங்கும்.

100 பில்லியன் டாலர் பண வரவு

- 2022 ஆம் ஆண்டில் 100 பில்லியன் டாலர்கள் மதிப்பிலானப் பண வரவினைப் பெற்ற உலகின் முதல் நாடு இந்தியாவாகும்.
- கடந்த ஆண்டு பதிவான 7.5 சதவீதமாக இருந்த இந்தியாவின் பண வரவானது 12

சதவீதமாக அதிகரிக்கும் என்று உலக வங்கி கூறியுள்ளது.

- அமெரிக்கா, ஐக்கிய இராஜ்ஜியம் மற்றும் கிழக்கு ஆசிய நாடுகளில் அதிக சம்பளம் பெறும் இந்தியப் புலம்பெயர்ந்தோரின் பெரும் பங்கே இந்த சாதனைக்கு காரணம் ஆகும்.
- இந்தியாவின் பண வரவானது, 2022 ஆம் ஆண்டில் அதன் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3 சதவீதம் மட்டுமே இருக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.
- ஐக்கிய அரபு அமீரகத்தினை விஞ்சி இந்தியாவிற்கு அதிகப் பண வரவினை வழங்கும் மூல ஆதார நாடாக அமெரிக்கா சமீபத்தில் உருவெடுத்துள்ளது.



இந்தியாவின் முதல் தங்க நாணய தானியங்கு வழங்கீட்டு எந்திரம்

- கோல்ட்சிக்கா பிரைவேட் லிமிடெட் நிறுவனமானது தனது முதல் தங்க நாணய ATM மையத்தினை ஹைதராபாத்தில் தொடங்கியது.
- இந்த ATM இயந்திரமானது 0.5 கிராம் முதல் 100 கிராம் வரையிலான தங்க

நாணயங்களை வழங்குகிறது.

- மக்கள் தங்கள் பற்று அல்லது கடன் அட்டைகளை இயந்திரத்தில் செருகி அதன் மூலம் தங்க நாணயங்களைப் பெற இயலும்.

சுற்றுச்சூழல் செய்திகள்

கொரோனிவியா வேளாண் கூட்டுப் பணி



- கொரோனிவியா வேளாண் கூட்டுப் பணிக்கு (KJWA) இந்தியா எதிர்ப்பு தெரிவித்து உள்ளது.
- இது ஐக்கிய நாடுகளின் பருவநிலை மாற்றத்திற்கான ஒப்பந்தக் கட்டமைப்பின் கீழ் ஒரு முக்கிய முடிவாகும்.
- கொரோனிவியா வேளாண் கூட்டுப் பணி வேளாண் துறையில் இருந்து வெளியாகும் பசுமை இல்ல வாயு உமிழ்வினைக் குறைக்க முயல்கிறது.
- பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்வதில் வேளாண் துறையின் தனித்துவமானத் திறனை அங்கீகரிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது மண், ஊட்டச்சத்துப் பயன்பாடு, கால்நடைகள், நீர், வேளாண் துறையில் ஏற்பு மற்றும் சமூக-பொருளாதார மற்றும் உணவுப் பாதுகாப்பு சார்ந்த பரிமாணங்களை அளவிடும் முறைகள் ஆகிய ஒன்றோடொன்று தொடர்புடைய 6 துறைகளுக்கான தீர்வினைக் குறிப்பிடுகிறது.
- வேளாண் துறைகளில் இருந்து வெளிவரும் மாசுக்கள் "ஆடம்பர வாழ்க்கை சார்ந்த" உமிழ்வுகள் அல்ல, அது ஏழைகள் "உயிர் பிழைப்பதற்கான முயற்சியில் வெளியாகும் உமிழ்வுகள்" என்று இந்தியா கூறுகிறது.
- வளர்ச்சியடைந்த நாடுகள் உலகிற்கு 790 ஜிகா டன் கார்பன் டை ஆக்சைட் அளவிலான கார்பன் கடனைச் செலுத்த வேண்டியுள்ளது என்று இந்தியா சுட்டிக் காட்டியது.
- ஒரு டன்னுக்கு 100 அமெரிக்க டாலர் என்ற மிதமான விலையில் நிர்ணயத்தில் கூட இது சுமார் 79 டிரில்லியன் அமெரிக்க டாலர் மதிப்புடையதாகும்.
- உலக மக்கள்தொகையில் நான்கில் ஒரு பங்கைக் கொண்டிருந்தாலும், தொழில்

துறைக்கு முந்தையக் காலத்திலிருந்து 2019 ஆம் ஆண்டு வரையில் தெற்காசியா வெளியிட்ட மொத்த கார்பன் உமிழ்வு 4 சதவீதத்திற்கும் குறைவாகவே உள்ளது.

- இந்தியாவின் தனிநபர் வருடாந்திர உமிழ்வுகள் உலக சராசரியில் மூன்றில் ஒரு பங்கு ஆகும்.
- முழு உலகமும் இந்திய நாட்டின் போலவே தனிநபர் உமிழ்வு அளவில் கார்பனை வெளியேற்றினால், பருவநிலை நெருக்கடிக்குத் தீர்வு காண முடியும்.

மாநிலச் செய்திகள்

திவ்யாங் துறை

- திவ்யாங் பிரிவினருக்கான (மாற்றுத் திறனாளிகள்) தனி அரசுத் துறையை உருவாக்குவதற்கு மகாராஷ்டிரா அரசு ஒப்புதல் அளித்துள்ளது.
- இதன் மூலம் இந்தியாவில் மாற்றுத் திறனாளிகளுக்கென தனித் துறையை அமைத்த முதல் மாநிலம் மகாராஷ்டிரா ஆகும்.
- அந்த மாநிலத்தில் உள்ள உடல் மற்றும் மனநலம் குன்றியவர்களுக்கு கல்வி மற்றும் தொழில் ரீதியான சேவைகளை வழங்குவதற்காக இத்துறை நிறுவப்பட்டுள்ளது.
- திவ்யாங் பிரிவினரின் நலனை உறுதிப்படுத்துவதையும், அவர்களை பயனர் இலக்காகக் கொண்டு அறிமுகப்படுத்தப்படும் பல்வேறு அரசு திட்டங்களைத் திறம்பட செயல்படுத்துவதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

இந்தியாவின் முதல் செயற்கை ஒளியூட்டல் அற்ற பகுதி

- லடாக்கின் சாங்தாங் பகுதியில் உள்ள ஹன்லே கிராமத்தில் இந்தியாவில் முதல் முறையாக செயற்கை ஒளியூட்டல் அற்ற பகுதியினை அமைக்கப்பட உள்ளது.
- ஹான்லியில் சுமார் பதினெட்டு இடங்களில், விண்மீன்களின் ஆய்விற்காக அந்த சக்தி

வாய்ந்த தொலைநோக்கிகள் நிறுவப்பட உள்ளது.

- உலகின் இரண்டாவது மிக உயர்ந்த ஒளியியல் தொலைநோக்கியானது ஹான்லியில் அமைந்துள்ளது.
- இது இந்திய வானியற்பியல் நிறுவனத்தினால் 2001 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.

பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

பேங்கர்ஸ் இதழின் ஆண்டின் சிறந்த வங்கியாளர் விருது

- இலண்டனில் நடைபெற்ற உலக வங்கி உச்சி மாநாட்டில் இந்தியப் பிரிவிற்கான 'பேங்கர்ஸ் இதழின் 2022 ஆம் ஆண்டின் சிறந்த வங்கியாளர் விருதினை' கனரா வங்கி பெற்றது.

- பேங்கர்ஸ் இதழின் ஆண்டின் சிறந்த வங்கியாளர் விருதுகள் ஆனது வங்கித் துறைக்கான ஆஸ்கார் விருதாக கருதப்படுகிறது.
- உலகெங்கிலும் உள்ள 180க்கும் மேற்பட்ட நாடுகளுக்கான முதன்மையான உலகளாவிய வங்கி மற்றும் நிதி ஆதாரமாக பேங்கர்ஸ் இதழ் திகழ்கிறது.
- கனரா வங்கியானது 1906 ஆம் ஆண்டில் மங்களூருவில் அம்மேம்பாள் சுப்பா ராவ் பாய் என்பவரால் நிறுவப்பட்டது.
- இந்த வங்கியின் அலுவலகங்கள் இலண்டன், துபாய் மற்றும் நியூயார்க் ஆகிய இடங்களிலும் அமைந்துள்ளன.

உலகின் முதல் மாற்றுத் திறனாளி விண்வெளி வீரர்

- ஐரோப்பிய விண்வெளி நிறுவனம் ஆனது உலகின் முதல் "மாற்றுத் திறனாளி விண்வெளி வீரரை" (பாராஸ்ட்ரோனாட்) அறிமுகப் படுத்தியுள்ளது.
- இது மாற்றுத் திறனாளிகளை விண்வெளியில் பணியாற்றச் செய்வதற்கும், அங்கு வாழ்வதற்கும் வழி வகை செய்வதற்கான ஒரு முக்கியப் படிநிலையாகும்.
- விண்வெளி வீரர்களுக்கான பயிற்சியின் போது மேற்கொள்ளப்படும் சாத்தியக்கூறு ஆய்வில் பங்கேற்பதற்கு பிரிட்டிஷ் மாற்றுத் திறனாளி ஒலிம்பிக் தடகள வீரர் ஜான் மெக்ஃபாலை அந்நிறுவனம் நியமித்தது.
- எதிர்காலத்தில் மேற்கொள்ளப்பட உள்ள விண்வெளி ஆய்வுப் பணிகளில் மாற்றுத் திறனாளிகள் பங்கேற்பதற்குத் தேவையான பணி நிலைகளை இது மதிப்பிடுகிறது.

இதரச் செய்திகள்

மிக நீளமான இரட்டை அடுக்கு மேம்பாலம்

- நாக்பூர் நகர மெட்ரோ நிர்வாகமானது 3,140 மீட்டர் நீளமான இரட்டை அடுக்கு மேம்பாலத்தினை (மெட்ரோ) கட்டமைத்து கின்னஸ் சாதனை படைத்துள்ளது.
- வார்தா சாலையில் 3.14 கிமீ நீளத்தில் அமைக்கப்பட்டுள்ள இந்த இரட்டை அடுக்கு மேம்பாலத்தின் வழியில் சத்ரபதி நகர், ஜெய் பிரகாஷ் நகர் மற்றும் உஜ்வல் நகர் ஆகிய மூன்று மெட்ரோ நிலையங்கள் அமைந்துள்ளன.

- இந்தத் திட்டமானது ஏற்கனவே ஆசிய சாதனைப் புத்தகம் மற்றும் இந்தியா சாதனைப் புத்தகம் ஆகியவற்றில் இடம் பெற்றுள்ளது.

✯ ✯ ✯ ✯ ✯ ✯ ✯ ✯ ✯ ✯